செ.வெ.எண் : 02 /ஆகஸ்ட் நாள் : 01.08.2017

# இராமநாதபுரம் மாவட்டம்

## பிரதம மந்திரியின் புதிய பயிர் காப்பீட்டு திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கான பயிர்காப்பீடு இழப்பீட்டு தொகை, அவரவர் வங்கிக் கணக்குகளில் நேரடியாக வரவு வைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்

இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம், பட்டிணம்காத்தான் கிராமத்தில் உள்ள காட்டூரணி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க அலுவலகத்தில் இன்று (01.08.2017) மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள், பிரதம மந்திரியின் புதிய பயிர் காப்பீட்டு திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு பயிர்காப்பீடு இழப்பீட்டு தொகை வழங்குவதற்காக மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின் போது கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் திரு.முருகேசன் உடனிருந்தார்.

ஆய்வுக்கு பிறகு மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது:

இராமநாதபுரம் மாவட்டத்தில் 2016-2017 -ஆம் ஆண்டில் எதிர்பார்த்த அளவு வடகிழக்கு பருவ மழை பெய்யாத காரணத்தினால் மாவட்டத்தின் அனைத்து பகுதிகளிலும் கடுமையான வறட்சி ஏற்பட்டது. மேலும் பிரதம மந்திரியின் புதிய பயிர் காப்பீடு திட்டத்தின் கீழ் மாவட்டத்தில் நெல் மற்றும் இதர வேளாண் பயிர்களுக்கு 1,17,542 விவசாயிகளுக்கு 1,12,981 ஹெக்டேர் பரப்புக்கு பயிர் காப்பீடு செய்யப்பட்டுள்ளது. மிளகாய் போன்ற தோட்டக்கலை விவசாயிகளுக்கு 10,044 விவசாயிகளுக்கு 8220 ஹெக்டேர் பரப்பிற்கு பயிர் காப்பீடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் இராமநாதபுரம் மாவட்டத்தில் 2016-2017 ஆம் ஆண்டு பிரதம மந்திரி புதிய வேளாண் பயிர் காப்பீட்டு திட்டம் (PMFBY) மூலம் நெல் -II பயிருக்கு பயிர்க்காப்பீடு இழப்பீட்டுத் தொகையாக ரூ.355.28 கோடி வரப்பெற்றுள்ளது. இத்தொகை தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள், வணிக வங்கிகள் மற்றும் வேளாண் காப்பீடு நிறுவனம் மூலம் வழங்கப்பட்டு வருகின்றன. தற்போது தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் ரூ.101.00 கோடி, வணிக வங்கிகள் மூலம் ரூ.5.87 கோடி மற்றும் வேளாண் காப்பீடு நிறுவனம் மூலம் ரூ.43.77 கோடி ஆக மொத்தம் ரூ.150.64 கோடி பயிர் காப்பீடு சந்தா செலுத்திய விவசாயிகளுக்கு அவரவர் வங்கி சேமிப்பு கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து மாவட்டத்தில் உள்ள மொத்தம் 124 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் நெல் - II பயிர் காப்பீடு இழப்பீட்டு தொகையானது, விவசாயிகளின் வங்கி சேமிப்பு கணக்குகளில் நேரடியாக வரவு வைத்திட தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**